# இலங்கை தமிழ் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் அதன் போக்கும் நோக்கும்: ஓர் சமூகவியல் நோக்கு (1979 முதல் 2010 வரை)

**S. MOSES**
Producer, Sri Lanka Rupavahini Corporation, Colombo.
stanimoses@yahoo.com

**Abstarct:** It was in 1979 January that an idea was conceived to commence a television channel in Sri Lanka. Following this in 1982 February 15th Sri Lanka Rupavahini Corporation, the National Television Channel was ceremoniously established. In time to come many television channels came into being. Further not only these In Sri Lanka by fixing modern antennas and through internet viewers are able to view various global television channels. Unlike other communication media, with the combination of voice, data and visuals means of communication media, with its influence on both sight and hearing, television has exerted a great influence on different levels of the society especially producing immense influence on the decision making process. In today's context in Sri Lanka different television channels, competing among themselves are telecasting a variety of programmes. When thinking in this context; Sri Lankan television channels, Tamil TV shows, news and histories with them about issues related to search, upon examination of the document to be made clear that the most important obligation. This study is a part of it.

**Keywords:** Television, Production, channels, Social Ethics, Media Ethics

## 1. அறிமுகம்:

அறிவியலின் இடைவிடாத வேகமான செயற்பாடு தொழில் புரட்சியின் அடிப்படையில் இருபதாம் நூற்றாண்டில் மின்னியல் தொழிநுட்பக் கருவிகளை உருவாக்கியுள்ளன. அதன் காரணமாக தகவல் தொடர்பிலும் மின்வழிச் சாதனங்கள் பயன்பாட்டுக்கு வரத்தொடங்கியுள்ளன. அவற்றில் தொலைக்காட்சி முக்கியமானதொரு இடத்தினைப் பெறுகின்றது. இது கேட்டல், பார்த்தல், அசைவு, நிரல்கள் இணைந்த ஓர் ஊடகம். தொலைக்காட்சி நிகழ்வுகள் கூடிய அளவு காட்சி சார்ந்தன. காட்சிகளுடன் மொழியும் இணைக்கப்பட்டே தொலைக்காட்சிக் கருத்துக்கள் உருவாக்கப்படுகின்றன. தொலைக்காட்சிக்காக சிறப்புத் தொழிநுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன. படம் பிடிக்கும் கருவி தொடக்கம் படத்தினை ஒளிபரப்பும் கருவி வரை தொழிநுட்பம் நிறைந்துள்ளது. அதனால் சமூகத்தில் அதிக தாக்கத்தினை இது ஏற்படுத்துகிறது.

1979ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13ம் திகதி இலங்கையில் தோற்றம் பெற்ற தொலைக்காட்சி அலைவரிசை இன்று வரை தனது தொடர்ச்சியான சேவையை பன்முகப்பட்ட வகையில் வழங்கி வந்திருக்கிறது. அதனிடையே ஏராளமான தொலைக்காட்சி அலைவரிசைகள் இலங்கையில் தோற்றம் பெற்றுவிட்டன. அதேபோன்று சில அலைவரிசைகள் தோன்றி மறைந்தும் விட்டன. அவற்றினை அரச அலைவரிசைகள், தனியார் அலைவரிசைகள் என பகுத்து கூறலாம். ரூபவாஹினி,EYE,நேத்ரா,NTV, ITN, வசந்தம் ஆகிய ஆறும் அரச அலைவரிசைகள் ஆகும். முறையே முதல் நான்கும் ரூபவாஹினிக் கூட்டுத்தாபன நிர்வாகத்தின் கீழும் மற்றைய இரண்டும் சுயாதீன தொலைக்காட்சி நிறுவன நிர்வாகத்தின் கீழும் பணியாற்றுகின்றன. அவற்றில்ரூபவாஹினி,EYEஆகியவை ஆரம்ப காலத்திலும் நேத்ரா, வசந்தம் ஆகியவை பிற் காலத்திலும் தமிழ் நிகழ்ச்சிகளை ஒளிபரப்பியுள்ளன. NTV அலைவரிசை தற்பொழுது நிறுத்தப்பட்டுவிட்டது. எம்.ரி.வி(MTV),சக்தி, சிரச(Sirasa),ரி.என்.எல்.(TNL),சுவர்ணவாஹினி(Swarnavahini),டயான வி'ன்(Dina vision),சி.என்.என்.(CNN),ஈ.ரி.வி. (ETV),ஆர்ட்ரி.வி(ArTV),தெரண(Derana), MaxTV,ரி.வி.லங்கா, த புடிஸ்ற் ரி.வி, லங்கா ரி.வி. நெத், சியத்த ரி.வி, டான் ரி.வி, பிறைம் ரி.வி, வெற்றி ரி.வி,CSN,சி.சி.ரி.வி என இலங்கையில் 17இற்கும் மேற்பட்ட தனியார் அலைவரிசைகள் இன்று சேவையில் உள்ளன. இவற்றினைவிட உதயம் ரி.வி, தமிழீழ தேசிய தொலைக்காட்சி என்பவையும் ஒளிபரப்பினை மேற்கொண்டுள்ளன. தற்பொழுது அவை நிறுத்தப்பட்டுவிட்டன.

இவ்வாறான பின்னணியில் சிந்திக்கும் போது இலங்கை தொலைக்காட்சி அலைவரிசைகள்,தமிழ் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், செய்திகள் மற்றும் அவற்றோடு தொடர்பான விடயங்களை பற்றிய வரலாறுகளை தேட வேண்டியதும், அவற்றை வரன்முறை ரீதியில் ஆய்வு செய்து ஆவணப்படுத்த வேண்டியதும் மிக அவசியமான கடப்பாடு என்பது புலப்படுகிறது. அதன் ஒரு அங்கமாகவே இந்த ஆய்வு அமைகிறது. அந்த வகையில் குறித்த ஆய்வின் ஒரு பகுதியாக அமையும் ரூபவாஹினி தொலைக்காட்சியின் தமிழ் செய்திகள் தொடர்பான விடயங்களை வரன்முறை ரீதியில் விளக்குவதே இந்த ஆய்வுப் பகுதியின் உள்ளடக்கமாக அமைகிறது.

**2. ஆய்வுக்கான முறையியல்:**

இலங்கையில் ஒளிபரப்பாகியுள்ள தமிழ் தொலைக்காட்சி செய்திகள் தொடர்பாக இதுவரை எவருமே பூரணமானதொரு ஆய்வினை செய்யாததன் காரணமாக இந்த ஆய்வானது ஒரு முன்னிலை ஆய்வாக(Preliminary Survey)கொள்ளப்படவேண்டும். இலங்கை தமிழ் தொலைக்காட்சி செய்திகள் குறித்த விளக்க ஆய்வாக(Descriptive Study) இது அமைந்துள்ளது. ஆய்வின் கால எல்லையானது(Periods of Time to be covered by the study)இலங்கையில் தொலைக்காட்சி அலைவரிசை தோற்றம் பெற்ற 1979ஆம் ஆண்டு முதல் எமது ஆய்வு தொடங்கப்பட்ட 2010ஆம் ஆண்டு வரையும் வரையறுக்கப்பட்டுள்ளது.

மேற்சொன்னதன் அடிப்படையில் 32 ஆண்டு காலமாக இலங்கை தொலைக்காட்சி அலைவரிசைகளில் ஒளிபரப்பாகியுள்ள தமிழ் செய்திகள் பற்றிய ஆவணத்தை உருவாக்குவதோடு, அவற்றில மாதிரித்தெரிவை மேற்கொண்டு, ஆய்வின் இணை நோக்கத்திற்கேற்ப அவற்றின் மீது பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதல்நிலைத் தரவுகளுக்காக(Primary Data)ஆய்வின் வரையறைக்கேற்ப தமிழ் தொலைக்காட்சி செய்திகள்,அவை ஒளிபரப்பாகிய அலைவரிசைகள் என்பவை நோக்கப்பட்டுள்ளன. துணைநிலைத் தரவுகளுக்காக (Secondary Data)தமிழ் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், அவை ஒளிபரப்பாகிய அலைவரிசைகள் பற்றி வெளிவந்துள்ள கட்டுரைகள்,நூல்கள், ஆய்வேடுகள், வழிகாட்டி நூல்கள், ஆண்டறிக்கைகள், நிகழ்ச்சிநிரல் பதிவுகள் போன்றவை நோக்கப்பட்டுள்ளன. கள ஆய்வானது(Field Research) பின்வருமாறு செய்யப்பட்டுள்ளது. இலங்கைத் தொலைக்காட்சி செய்திகள் மற்றும் அலைவரிசைகளோடு நேரடித் தொடர்புபட்ட தயாரிப்பாளர்கள், பணிப்பாளர்கள் மற்றும் இவை பற்றிய அறிவுடைய விமர்சகர்கள், திறனாய்வாளர்கள் போன்றோரிடமிருந்து தகவல்கள் பெறப்பட்டுள்ளன.

**3. ஆய்வின் வரையறைகளும் மட்டுப்பாடும்:**

இலங்கை தொலைக்காட்சி அலைவரிசைகளின் தோற்றம், வளர்ச்சி,செய்திகள் மற்றும் தமிழ் செய்திகள் பற்றிய பார்வை, இவற்றின் தயாரிப்பாளர்கள், நிர்வாகிகள், உயரதிகாரிகள் பற்றிய நோக்கு, இந்த அலைவரிசைகளில் ஒளிபரப்பப்பட்ட நிகழ்ச்சிகளின் சமூகம் மீதான தாக்கம், அதனால் சமூக அபிவிருத்தியில் ஏற்பட்ட விளைவுகள் போன்றவை ஆய்வுக்குட்படுத்தப்பட்டும் ஆவணப்படுத்தப்பட்டும் உள்ளன. அதற்கேற்ப ஆய்வின் மட்டுப்பாடுபின்வருமாறு அமைந்துள்ளது.

- மேற்குறிப்பிட்ட சேவைகளில் அரச தொலைக்காட்சி அலைவரிசைகளாகவும் ஆரம்ப காலம் முதல் இன்று வரை தமிழ் செய்திகளை ஒளிபரப்பி வரும் அலைவரிசைகளுமான ரூபவாஹினி, ஐ, நேத்ரா ஆகிய மூன்று அரச அலைவரிசைகளில் ஒளிபரப்பாகிய தமிழ் நிகழ்ச்சிகள் மட்டுமே நோக்கப்பட்டுள்ளன.
- எம்மால் ஆவணப்படுத்தப்பட்டுள்ள தமிழ் செய்திகளிலும் மாதிரித் தெரிவு கையாளப்பட்டுள்ளது.
- தரவுகள், தகவல்கள் என்பவற்றில் உள்ள உண்மைத் தன்மைகள் ஆய்வினை கட்டுப்படுத்தியுள்ளன.
- இவ்வாய்விற்காக தமிழ் பேசும் பார்வையாளர்களிடம் மட்டுமே கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- கள ஆய்வுக்காக சகல தரத்தினருடனும் தொடர்பாடல் மேற்கொள்ளப்பட்டது.
- உள்ளடக்கப் பகுப்பாய்வானது(Content Analysis) மேற்குறிப்பிட்ட இலங்கைத் தமிழ் தொலைக்காட்சி செய்திகளையும் அவை ஒளிபரப்பாகிய அலைவரிசைகள் மற்றும் இவற்றோடு தொடர்பான விடயங்கள் அனைத்தையும் தற்சார்பற்ற முறையிலும் முறையாகவும் விளக்குவதாக அமைகிறது.

- அதேபோன்று செய்திகளின் தன்மை, ஒளிபரப்பாகிய காலம், நேர அளவு போன்ற பல விடயங்களும் எண்ணிக்கை(Numerical)அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

**4. முடிவுகளும் விதந்துரைப்பும்:**
தொலைக்காட்சி செய்தித் தயாரிப்பு என்பது தொலைக்காட்சி என்ற ஊடகத்தில் ஒளிபரப்புவதற்காக உருவாக்கப்படும் கலைப்படைப்பாகும். அதற்கு சில அடிப்படை விதிகள் பின்பற்றப்படுகின்றன. அதுமட்டுமன்றி மனித வளங்களோடு தொழிநுட்ப சாதனங்களும் இணைந்துதான் ஒரு செய்தியை உருவாக்குகின்றன அல்லது படைக்கின்றன. இதன் செய்தி உருவாக்கம் அல்லது தயாரிப்பு என்பது ஒரு குழுவின் கூட்டு முயற்சியாகும். இவற்றினை அல்லது இவர்களைக் கொண்டு தயாரிக்கப்படும் செய்திகள் மூன்று நிலைகளைக் கொண்டிருக்கும். அவை முன்னிலை தயாரிப்பு( Pre-Production ),தயாரிப்பு நிலை(Production – Recording ),பின்னிலை தயாரிப்பு( Post-Production )என்பவையாகும்.தொலைக்காட்சி அலைவரிசையில் பலதரப்பட்ட செய்திகள் ஒளிபரப்பாகின்றன. அவற்றின் வடிவம் (Programme Format),அவற்றின் கரு அல்லது பொருள் (Programme Concept)என்பவற்றின் அடிப்படையில் அவற்றினை வகைப்படுத்தி நோக்கலாம். இதில் பார்வையாளரின் மட்டமும்(Target Audience)செல்வாக்கு செலுத்துகின்றது.

**ரூபவாஹினி தமிழ் செய்திகளின் போக்கு:**அதிகமாக தமிழ் செய்திகளை ஒளிபரப்பும் அலைவரிசையாக சக்தி அலைவரிசையைக் குறிப்பிடலாம். இரண்டாவதாக அதிகம் தமிழ் செய்திகளை ஒளிபரப்பும் அலைவரிசை 'ஐ' (தற்பொழுது நேத்ரா) ஆகும். இது அரச தொலைக்காட்சியாக இருப்பதனால் இதற்கு சமூகப்பொறுப்பு அதிகமாகவே இருக்க வேண்டும். எமது ஆய்வுப்பரப்பின் முக்கிய தொலைக்காட்சியான ரூபவாஹினியும் அதனோடிணைந்த 'ஐ'இ நேத்ரா அலைவரிசைகளும் தோற்றம் பெற்ற பின்னர் ஒளிபரப்பாகியுள்ள தமிழ் செய்திகளை பற்றி நோக்குவோம்.

ரூபவாஹினி ஆரம்பிக்கப்பட்டு தமிழ் செய்தி ஒளிபரப்பு இடம்பெற முன்னதாகவே 1979ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட சுயாதீன தொலைக்காட்சியில் 'செய்தி மஞ்சரி' என்ற பெயரில் வாரத்திற்கு ஒரு தடவை சிங்களம், ஆங்கில ஆகிய மொழிகளில் செய்திகள் வாசிக்கப்பட்டுள்ளன. பின்னர் 1981ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் வாரத்தில் ஒரு தடவை இது தமிழ் மொழியிலும் ஒளிபரப்பாகியுள்ளது. 1983ஆம் ஆண்டு ஜுலையில் ஏற்பட்ட இனக்கலவரங்களினால் தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டனர். அதன் காரணமாக தமிழ் செய்திகளும் சீர்குலைந்துள்ளது.

இலங்கை மக்களுக்கு கல்வி நிகழ்ச்சிகளையும், அறிவூட்டல் நிகழ்ச்சிகளையும் வழங்க வேண்டுமென்பதே ஜப்பானிய அரசாங்கத்தின் பிரதான நோக்கமாக இருந்துள்ளது. அந்த நோக்கத்தின் பொருட்டே அலைவரிசை ஆரம்பிக்கப்படுவதற்கான நிதி மற்றும் உதவிகளை வழங்கியதோடு கலையகம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. செய்தி ஒளிபரப்புகள் கலையகம் இரண்டில் இடம்பெற்று வந்துள்ளன. சிங்கள, ஆங்கில செய்தி அறிக்கைகள் உட்பட தமிழ் செய்தி அறிக்கைகள் ரூபவாஹினியின் ஒரே அலைவரிசையில்தான் 2002ஆம் ஆண்டு வரை ஒளிபரப்பாகி வந்துள்ளது.

தேசிய தொலைக்காட்சி என்ற காரணத்தினால் மூன்று மொழிகளிலும் செய்திகளை வழங்கவேண்டிய பொறுப்பு இருந்துள்ளது. அதன் காரணமாக தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் செய்திகளும் செய்தி சார்ந்த நிகழ்ச்சிகளும் ஒளிபரப்பாகி வந்துள்ளன. அதனை செய்தி மற்றும் நடப்பு விவகார பிரிவு வழங்கி வந்துள்ளது.

ரூபவாஹினி ஆரம்பித்தபோது ஏழு தயாரிப்பாளர்கள் மட்டுமே செய்தி மற்றும் நடப்பு விவகாரப்பிரிவில் நிரந்தரமாக பணியாற்றியுள்ளனர். அதேபோன்று ஒரு மொழிக்கு மூன்று செய்தி வாசிப்பாளர் என்ற வகையில் ஒன்பது செய்தி வாசிப்பாளர்கள் ஒப்பந்த அடிப்படையிலும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் பணியாற்றிய சிலர் பகுதிநேரஅடிப்படையிலும் பணியாற்றியுள்ளனர். அரசாங்கத்தினது சிபார்சின் அடிப்படையில் பல செய்திகள் ஒளிப்பதிவு செய்யப்பட்டு ஒளிபரப்பாகியுள்ளன. மக்களின் சில கோரிக்கைகளும் நிறைவேற்றப்பட்டு வந்துள்ளன. பத்திரிகைகளிலிருந்தும் முக்கியமான சில செய்திகள் தெரிவு செய்யப்பட்டு வழங்கப்பட்டிருக்கின்றன.

வெளிநாட்டுச் செய்திகள் சுயாதீன தொலைக்காட்சி நிறுவனத்தினூடாக விஸ்நியூஸ்(Visnews - satellite feed)சேவையின் செய்திகளை ஆரம்பத்தில் பெற்றுள்ளனர். சிறிது காலத்தின்பின் ஆசிய - பசுபிக் பிராந்திய செய்திகள்(ASPAC DSF - Asia - pacific daily satellite feed) பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

தொலைக்காட்சி செய்தியறிக்கைகள் ஒளிபரப்பாகத் தொடங்கிய காலம் முதல் இரவு ஏழு மணிக்கு 15 நிமிடநேர தமிழ் செய்தியறிக்கை ஒளிபரப்பாகி வந்துள்ளது. முக்கியமான அரசாங்க பிரமுகர்கள் கலந்து கொண்ட நிகழ்வுகள் பற்றிய செய்திகளுக்கே தமிழில் அதிகநேரம் ஒதுக்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. அதிகமான சிங்கள மொழிமூல செய்திகளே தமிழில் மொழிபெயர்த்து ஒளிபரப்பப்பட்டுள்ளது. 1983ஆம் ஆண்டு ஜூலையில் ஏற்பட்ட இனப்பிரச்சினை காரணமாக சிறிது காலங்கள் தமிழ் செய்தி வாசிப்பாளர்கள் கடமைக்கு சமூகம் கொடுக்கவில்லை. அதன் காரணமாக தமிழர் அல்லாதோர் தமிழ் செய்திகளை வாசித்துள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

1984ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் மூன்று மொழி செய்தியறிக்கைகளுக்குமான ஒளிபரப்பு நேரம் தலா ஐந்து நிமிடங்களால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன் காரணமாக தமிழ்ச் செய்தி ஒளிபரப்பின் முழு நேரமும் இருபது நிமிடங்களாகியுள்ளது. ஜனாதிபதி அமெரிக்கா, சீனா, ஜப்பான், கொரியக்குடியரசு, பிரிட்டன் ஆகிய நாடுகளுக்குமேற்கொண்ட விஜயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு ரூபவாஹினியின் செய்திகள் ஒளிபரப்பாகியுள்ளமை தெரிகிறது.

இலங்கையின் நிர்வாக மாவட்டத்திற்கு ஒருவர் என்ற அடிப்படையில் மாகாண நிருபர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இது ஒரு புதிய முயற்சியாக காணப்படுகிறது. இருந்த போதிலும் இவர்கள் அனைவரிடமும் வீடியோப் படக்கருவிகள் இல்லாமை பெருங்குறையாக அவதானிக்கப்பட்டுள்ளது. ஆனாலும் 24 மாவட்டங்களிலும் இருந்த நிருபர்கள் தத்தமது மாவட்டங்களில் நடைபெற்றுள்ள முக்கியமான உள்ளூர் செய்திகளைப் புகைப்படங்களுடன் செய்திகளுக்காக அனுப்பிவைத்துள்ளனர். அவைகள் செய்தியறிக்கைகளில் அதிகமாக இடம்பெற்றுள்ளன.

அதுவரை காலமும் செய்தியறிக்கைகள் ஒளிபரப்பாகி வந்த நேரங்களில் 1985ஆம் ஆண்டில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய இரவு 7 மணிக்கு ஒளிபரப்பாகி வந்த தமிழ்ச் செய்தியறிக்கை மாலை 6.30 மணிக்கு ஒளிபரப்பாகத் தொடங்கியுள்ளது. அதே போன்று சிங்களச் செய்திகள் இரவு எட்டு மணிக்கும் ஆங்கிலம் இரவு ஒன்பது மணிக்கும் ஒளிபரப்பப்படத் தொடங்கியுள்ளமையும் தெரிகிறது.

வழமையாக ஒளிபரப்பப்பட்டு வந்த 20 நிமிடநேர செய்தியறிக்கைகளுக்கு மேலதிகமாக் மாலை ஐந்து மணிக்கு ஐந்து நிமிடநேர தலைப்புச் செய்திகள் ஒளிபரப்பாகத் தொடங்கியுள்ளது. இது ஞாயிற்றுக் கிழமைகளில் ஆறு நிமிடங்களாக அதிகரித்துக் காணப்படுகிறது. இந்த தலைப்புச் செய்திகள் தமிழிலும் சிங்களத்திலும் சமமமாக பகிர்ந்து ஒளிபரப்பப்பட்டு வந்துள்ளது.

1987ஆம் ஆண்டு செய்தி அறிக்கைகளோடு ‘சத்தியே புவத்’ என்ற புதிய அம்சமும் சேர்க்கப்பட்டுள்ளது. இந்தச் செய்தி அறிக்கைகளில் நாடு முழுவதிலுமுள்ள நிருபர்களால் அனுப்பப்பட்டு அபிவிருத்தி சார்பான செய்திக் குறிப்புக்களும் பல்வேறு அரசாங்க நிறுவனங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட செய்திகளும் ஒளிபரப்பாகியுள்ளன. இது தமிழிலும் இடம் பெற்றுள்ளதை அவதானிக்கமுடிகிறது.

ரூபவாஹினியின் ஆசிய வி‘ன் பிரிவானது தமது உள்ளுர் செய்திப்பதிவுகளில் யாழ்ப்பாண நிலைமைகள் பற்றிய அறிக்கைகளை வழங்கிவந்துள்ளனர். இனப்பிரச்சினை காரணமாக குழப்பம் நிலவிய வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்கு கூட்டுத்தாபனத்தின் குழுவினர் அடிக்கடி அனுப்பப்பட்டு கள நிலவரம் தொடர்பான பல செய்திகளை பெற்றுவந்துள்ளனர்.

தமிழ் மற்றும் ஆங்கில செய்திகளும் காலையில் ஒளிபரப்பப்படத் தொடங்கியுள்ளன. ஏற்கனவே சிங்கள செய்தி மாத்திரம் காலையில் ஒளிபரப்பப்பட்டு வந்துள்ளது. 1992ஆம் ஆண்டில் மேற்சொன்னவாறு தமிழ், ஆங்கில செய்திகளும் ஒளிபரப்பாகத் தொடங்கியுள்ளன.

முந்தைய நாள் ஒளிபரப்பான செய்தியறிக்கை மறுநாள் காலை எட்டுமணிக்கு மீள் ஒளிபரப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து 2003ஆம் ஆண்டு ஒக்டோபர் முதலாம் திகதி தொடக்கம் பகலில் 15 நிமிடநேர தமிழ்ச் செய்தி ஒளிபரப்பு பகல் 1.30க்கு இடம்பெறத் தொடங்கியுள்ளது. செய்தி ஒளிபரப்பு முறையில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக சமூகத்தில் முக்கியத்துவம் வாய்ந்த செய்திகளுக்கும் முன்னுரிமை கொடுக்கும் போக்கு காணப்படுகிறது.

2004ஆம் ஆண்டுசெய்தித் தயாரிப்பு மற்றும் செய்தி வாசிப்பு என்பவற்றில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. குறிப்பாக இலங்கையின் தேசியத்தினை எடுத்துக்காட்டும் விதத்தில் செய்தி வாசிப்பாளர்களது உடையமைப்பில் மாற்றங்கள் கொண்டு வரப்பட்டுள்ளதனை காணமுடிகிறது.

செய்தியறிக்கைகளின் வளர்ச்சிப் போக்கில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை பெற்றிருக்கும் ஒளிபரப்பானது 2010ஆம் ஆண்டில் தமது செய்திகளை நான்கு விதமாக வழங்கி வருவதை அவதானிக்க முடிகிறது. பிரதான செய்திகள் தினமும் இரவு ஏழு மணிக்கு, மதிய நேர செய்திகள் வாரநாட்களில் பகல் 1.30 மணிக்கு, மணிச் செய்திகள் வாரநாட்களில் காலை 8.25 முதல் மாலை 5.25 மணிவரை ஒவ்வொரு மணிநேரமும் ஒளிபரப்பி வருகிறது. அதற்கு மேலதிகமாக விசேட செய்திகள் (Breaking news)அவசியம் ஏற்படும் சந்தர்ப்பங்களில் மட்டும் ஒளிபரப்பி வருகிறது.

செய்திகளுக்கு மேலதிகமாக செய்திசார் நிகழ்ச்சிகளையும் செய்தி மற்றும் நடப்பு விவகாரப்பிரிவு வழங்கி வந்துள்ளது. தேர்தல், பாராளுமன்றம், தேசிய தினங்கள், அரசாங்க நிகழ்வுகள், சர்வதேச விழாக்கள் போன்ற குறிப்பிடத்தக்க விடயங்கள் சார்ந்ததாக அவற்றின் நிகழ்ச்சிகள் அமைந்துள்ளன. இந்நிகழ்ச்சிகள் தமிழில் வழங்கப்படாவிட்டாலும் தமிழ் சார்ந்த அறிவிப்பாளர்களும் இணைத்துக் கொள்ளப்பட்டே வழங்கப்பட்டுள்ளதை காணமுடிகிறது. அவை நேரடி ஒளிபரப்புகளாகவே பெரும்பாலும் காணப்படுகின்றன.

செய்தி மற்றும் நடப்பு விவகாரப் பிரிவானது நடப்பு விவகாரங்கள் சார்ந்த பல ஒளிப்பதிவு செய்யப்பட்ட நிகழ்ச்சிகளையும் ஒளிபரப்பி வந்துள்ளது. அதில் பல தமிழ் நிகழ்ச்சிகளும் காணப்படுகின்றன. அவற்றில் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகளாக ஒளி ஆரம் (1987), நிகழ்வின் நிழல் (1989) போன்ற செய்திசார் நிகழ்ச்சிகளை கூறலாம். 2006ஆம் ஆண்டில்ஆரம்பிக்கப்பட்டுள்ள 'நாளேடுகளில் இன்று' என்ற காலை எட்டு மணிக்கு ஒளிபரப்பான நிகழ்ச்சியும் குறிப்பிடத்தக்கதாகும். அது 2010ல் நேர மாற்றம் செய்யப்பட்டு காலை 7.30 க்கு ஒளிபரப்பாகத் தொடங்கியுள்ளது.

**ரூபவாஹினி தமிழ் செய்திகள் ஒரு நோக்கு:** ஆய்வுகளின்படி தொலைக்காட்சி பாவனையாளர்களின் தொகை வேகமாக அதிகரித்துக்கொண்டு செல்கின்றது. நகர்கள் மற்றும் நகரை அண்டிய பிரதேசங்களில் உயர்தர, மத்தியதர வகுப்பினைச் சார்ந்தோர் உள்நாட்டு, வெளிநாட்டு அலைவரிசைகளைDisk Antennaமூலம் பயன்படுத்துகின்றனர். கறுப்பு-வெள்ளை தொலைக்காட்சியை பயன்படுத்துவோரின் தொகை குறைந்து வர்ணத் தொலைக்காட்சியினை பயன்படுத்துவோரின் தொகை அதிகரித்துள்ளது.

தொலைக்காட்சிப் பெட்டிகள் பல்வேறு அளவுகளிலும் விலைகளிலும் கிடைப்பதனால் மக்கள் தமது பொருளாதார நிலைமைக்கேற்ப இதனை வாங்குகின்றனர். தமது குடும்ப முன்னேற்றம் கருதி மத்திய கிழக்கு நாடுகளுக்கு தொழில் வாய்ப்பு பெற்றுச் செல்வோரில் அனேகர் தமது நாட்டுக்கு திரும்பி வரும் போது தொலைக் காட்சிப் பெட்டி ஒன்றையும் வாங்கிக் கொண்டே வருகின்றனர். இதனை அக்குடும்பத்தை சார்ந்தோரும் எதிர் பார்க்கின்றனர். அக்குடும்பத்தின் ஏனைய அடிக்கட்டுமான வசதிகள் நிறைவு செய்யப்படாதிருப்பினும் தொலைக்காட்சி மிகவும் அவசியமானதொன்று எனக் கருதுகின்றார்கள்.

தொலைக்காட்சியை பார்ப்பதற்கு எழுத்தறிவு போன்ற எவையும் தேவையற்றது என்பதனால் பாமர மக்களும் அதிகளவில் கொள்வனவு செய்கின்றார்கள். இதற்கு ஏதுவாக தற்போதுSINGER, SHARP, LGபோன்ற இலத்திரனியல் சாதன விற்பனை நிறுவனங்கள் தமது முகவர்கள் ஊடாக தவணை முறையில் பணத்தை செலுத்துவோருக்கும் தொலைக்காட்சிப் பெட்டிகளை

வழங்குவதற்கு முன்வந்துள்ளதால் குறைந்தளவிலான வருமானத்தை பெறுபவர்கள் கூட இதனை கொள்வனவு செய்கின்றனர்.

பழைய தொலைக்காட்சிப் பெட்டிக்குப் பதிலாக புதிய தொலைக் காட்சிப் பெட்டியை குறிப்பிட்ட விலைக்கழிவுடன் வழங்குதல், குறித்த ஒரு பொருளை அதனுடன் இணைத்து இலவசமாக வழங்குதல் போன்ற காரணங்களால் இன்று தொலைக்காட்சியின் விற்பனையும் பாவனைகளும் அதிகரித்துள்ளன. மின்சார வசதிகள் இல்லாத அனேகமான பகுதிகளில் ஜெனரேட்டர், சூரிய ஒளி மூலமான மின்பிறப்பாக்கிகளை பயன்படுத்தி தொலைக்காட்சியினை பயன்படுத்துகின்றனர். மின்சார வசதிகள் இப்பிரதேசங்களுக்கு கொடுக்கப்படும் போது இதன் பாவனை இன்னும் அதிகரிக்கலாம் என ஆய்வுகளினூடாக அறிய முடிகிறது.

**செய்திகள் ஏற்படுத்திய தாக்கங்களும் சமூக விளைவுகளும்:** எமது ஆய்வுக்குட்படுத்தப்பட்ட அலைவரிசைகளும் செய்திகளும் தமிழ் சமூகத்தில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்களும் அதனால் ஏற்பட்டுள்ள பன்முகப்பட்ட சமூக விளைவுகளும் அதிகமாகும். குறிப்பிட்ட செய்திகளினால் அடைந்த மாற்றங்கள், வளர்ச்சிகள், பிறழ்வுகள், பின்னடைவுகள் அவற்றினால் தமிழ்ச் சமூகத்திற்குக் கிடைத்த நன்மைகள், தீமைகள் என அவை நோக்கப்பட்டன. ஒரு சமூகத்தின் கூறுகளாக பல்வேறு பட்ட அம்சங்களை குறிப்பிடலாம். அவற்றில் மேற்குறித்த தாக்கங்கள் குறித்த சமூகத்தின் கலை, இலக்கியம், பண்பாடு, பாரம்பரியம், மொழி, இலக்கணம், தொடர்பாடல், ஊடகம், அரசியல், பொருளாதாரம், கல்வி, குடும்பம், தனிமனித நடத்தை என்பவற்றில் ஏற்படுத்தியுள்ள விளைவுகள் என்ன என்பதை ஆராய்ந்துள்ளோம்.

செய்திகளில் பலம் எவை என நோக்குவோமாயின் மக்களுக்கு பெரும்பான்மையான தகவல்கள் உபயோகமாகவும் அறிவில் சேமித்து வைக்கக் கூடியதாகவும் இருந்துள்ளது. இதற்கிடையில் வரும் பொது அறிவுகள், வரலாற்று தகவல்கள் அறிவைப் அதிகரிக்கின்றன. பலவீனங்கள் எவை என நோக்குவோமாயின் சில சமயங்களில் நடுநிலை செய்திகளாக இல்லாமல் இருந்துள்ளன. எமது ஆய்வுக்குட்பட்ட ஒவ்வொரு அலைவரிசைகளிலும் வரும் செய்திகளும் மாறுபட்டு இருந்துள்ளன. குறிப்பாக தமிழ்ச்சமூகம் தொடர்பான செய்திகளில் இதனை அவதானிக்க முடிகிறது. சிங்கள, தமிழ் இனத்திற்கான செய்தி மற்றும் செய்திசார் நிகழ்ச்சிகளில் வெவ்வேறுபட்ட மொழிகளிலும் அவை வேறுபட்ட தகவல்களையும் கருத்துக்களையும் கொடுத்துள்ளன. செய்திகளை உண்மையென நம்புவோர் எது உண்மையென உணரமுடியாத நிலையில் இருந்துள்ளார்கள். செய்திகளைப் பொறுத்தவரையில் நடுவு நிலைமை என்பது கடைப்பிடிக்கப்பட வேண்டும். அது இந்தஅலைவரிசைகளில் 90% கடைப்பிடிக்கப்படவில்லை. அதனால் இதில் நன்மைகள் 10%இருந்தாலும் தீமைகள் 80%இருந்துள்ளது.

பல சிறப்புக்களை கொண்ட தமிழ் மொழி இலங்கை தமிழ் தொலைக்காட்சி செய்திகளில் மொழிக் கலப்பினால் பாதிக்கப்பட்டுள்ளதனை எமது ஆய்வுகளினூடாக அறிய முடிந்துள்ளது. தமிழ் மொழியை வளர்ப்பதிலே ஊடகங்களின் பங்கு இன்றியமையாத ஒன்றாகும் ஊடகங்களால் பாரிய மாற்றங்களை ஏற்படுத்த முடியும். ஆனால் இங்கு அது மறுதலையாக காணப்பட்டுள்ளது. நாகரிக உலகிற்கேற்ப மாற வேண்டும் என்பதற்காக தமிழ் மொழியினை மாற்றி அமைக்க முடியுமா. தமிழ் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் தமிழோடு சிங்கள ஆங்கில சொற்களை பயன்படுத்துவது ஒரு நாகரிகமாக மாறிவிட்டது. தமிழ் மொழியில் பேசுவதிலே என்ன தவறு இருக்கிறது. தமிழரே தமது மொழியை பயன்படுத்தாத போக்கு காணப்படுகிறது. இதற்கு சொல்லும் குற்றச்சாட்டு உண்மையான தமிழ் சொற்கள் எல்லோருக்கும் தெரியாது அதனால் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் இவ்வாறு பயன்படுத்துகிறோம் என்று சொல்கிறார்கள். வேற்று மொழிகளை குற்றம் சாட்டவில்லை. ஒரு சிலர் செய்கின்ற தவறுக்காக எல்லோரையும் குற்றம் சொல்வது சரியல்ல என்பதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். தொலைக்காட்சி செய்திகளில் அறிவிப்பாளர்கள் விடுகின்ற மொழி உச்சரிப்பு, வேற்றுமொழிக் கலப்பு தொடர்பாக மக்கள் பலரும் கருத்து கூறினார்கள்.

இவை இலாப நோக்கம் கருதி சில கீழ்த்தரமான செய்திகளையும், விடயங்களையும் வெளியிடுகின்றன. அதன்மூலமாக அதனை பார்ப்பவர்களிடமும் அக்கீழ்த்தரமான ரசனைகளை ஊட்டுகின்றன. கிசுகிசுக்கள், குற்றச்செய்திகள் போன்றவற்றை ஒளிபரப்புவதன் மூலம் கட்டிளமைப்பருவத்தினரின் உணர்வுகளை தூண்டி மாற்றிவிடுகின்றனர். எனவே கிசுகிசு, குற்றச்செய்திகளை தவிர்த்து அல்லது சீர்தூக்கிப் பார்த்து கொடுப்பது அவசியமாகும்.

வன்செயல், வக்கிரம், பலாத்காரம், பாலியல், கொலை, கொள்ளை போன்ற விடயங்களை பற்றிக் கூறும்போது அதனை மற்றவர்கள் செய்யத் தூண்டும் வகையில் ஒளிபரப்பக்கூடாது. அதேபோன்று விரோதம், பகைமை பாராட்டல் போன்ற தீய குணங்கள் தூண்டப்படும் வகையில் அவற்றை சித்திரித்துக் காட்டுவதும் தவிர்க்கப்பட வேண்டும். அதற்கு மாறாக இப்பருவத்தினரின் ஆளுமைகள் வளர்த்தெடுக்கப்படக் கூடிய வகையில் அது சார்ந்த நிகழ்ச்சிகளை தயாரித்த வழங்குவதோடு, தற்போதிருக்கும் அவ்வாறான நிகழ்ச்சிகளின் ஒளிபரப்பு நேரத்தை அதிகரிக்கவும் வேண்டும்.

தமிழ் தொலைக்காட்சி செய்திகளுக்கு தமிழ் சமூகம் மீதான பொறுப்புடைமை உள்ளது. அது அவற்றுக்கான சமூகம் பற்றிய தார்மீக பொறுப்புமாகும். அது தொடர்பான பன்முகப் பார்வை வேண்டும். எமது ஆய்வினூடாக பெறப்பட்டுள்ள முடிவுகளில் முக்கியமானதொன்று தொலைக்காட்சி செய்திகள் கட்டிளமைப்பருவத்தினர் மீது அதிக தாக்கம் செலுத்துகின்றது என்பதாகும். எனவே அது தொடர்பாக நோக்க வேண்டியது அவசியமாகும். மனித வாழ்க்கையில் கட்டிளமைப் பருவம் பாரிய மாற்றங்களை உண்டு பண்ணும் முக்கியமான வளர்ச்சிப் பருவமாகும். இப்பருவத்திலேயே ஒருவர் உடலியல், உளவியல் ரீதியான பல்வேறு மாற்றங்களுக்கு உட்படுகிறார். அவற்றில் பாலியல் உறுப்புக்களின் வளர்ச்சி, உணர்வுகளின் எழுச்சி போன்ற முக்கியமான மாற்றங்கள் ஒருவரது நடத்தையில் பாரியளவில் தாக்கத்தினை உண்டுபண்ணுகின்றன. இவ்வாறான காரணங்களால் இவ்வளர்ச்சிப் பருவம் சிறந்த முறையில் அணுகப்பட வேண்டியது அவசியமானதாகும்.

தொலைக்காட்சி சமூகத்தின் முக்கிய பிரிவினராக உள்ள இப்பருவத்தினர் மீது அதிகளவான பாதிப்பினை ஏற்படுத்துகின்றமை கண்டறியப்பட்டுள்ளது. இச்சாதனத்தின் மூலமாக வெளிப்படுத்தப்படும் விடயங்களில் அனேகமானவை வன்முறை, பலாத்காரம், பாலியல், திருட்டு, கொலை, கொள்ளை போன்றவைகளாக இருப்பதுடன், அவற்றை எவ்வாறான முறையில் வெற்றிகரமாக செய்யலாம் என்பவைகளையும் வெளிப்படுத்துகின்றன. இவ்வாறான வன்முறை மற்றும் வக்கிர போக்குகளால் பாதிக்கப்படும் இப்பருவத்தினர் தமது நிஜவாழ்வில் இவ்வாறான சந்தர்ப்பங்கள் ஏற்படும் போது தொலைக்காட்சியில் தாம் பார்த்து அனுபவித்த வகையில் அவற்றினை கையாள முனைகின்றனர். இதனால் அவர்களின் எதிர் காலம் சூனிய மயமாய் மாறி விடுகின்றது. ஆகவே இவ்வாறான செயற்பாடுகள் இவர்கள் மீது அதிக பாதிப்பினை ஏற்படுத்துகின்றன.

வேலை வாய்ப்பின்மை, நாட்டுச் சூழல் போன்ற இன்றைய காலகட்டத்தில் பொழுதுபோக்கு என்னும் ரீதியில் தொலைக்காட்சி போன்ற வெகுஜன தொடர்பு சாதனங்களின் ஊடாகவே தமது பெரும் பொழுதினை கழிக்கின்றனர். இக்காலப் பகுதியில் ஊடகங்களின் மூலம் அவர்கள் பெற்றுக்கொள்ளும் ஆரோக்கியமற்ற அனுபவங்கள் எதிர் காலத்தில் வன்முறை, வக்கிரம் நிறைந்த இளைஞர் சமூகம் உருவாகவே வழிவகுக்கும். ஆகவே, இவ்வாறானதொரு இருளை நோக்கும் வழி முறைகளை தொலைக்காட்சிகளின் ஊடாக வெளிப்படுத்துவதை தவிர்த்து ஓர் உன்னதமான, ஒழுக்கம் நிறைந்த எதிர்கால சந்ததியினரை கட்டியெழுப்பும் நோக்குடன் தொலைக்காட்சி மட்டுமல்ல தொடர்பு சாதனங்கள் அனைத்துமே செயற்பட வேண்டிய தார்மீக கடமை அவசியமானதாகும்.

தொலைக்காட்சி உள்ளிட்ட தொடர்பு சாதனங்கள் தனிமனிதனிலும், சமூகத்திலும் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தக் கூடிய சக்தி வாய்ந்தன. கணினி மற்றும் தொழிநுட்ப வளர்ச்சிகளை உள்வாங்கிக் கொண்டு தொலைக்காட்சி பெரும் வளர்ச்சி கண்டு வருகின்றது. இதன் துரித வளர்ச்சியினைப் போன்று இதனால் ஏற்படும் பாதிப்புக்கள் குறித்தும் பேசப்படுவதோடு, விமர்சனங்களும், விவாதங்களும், ஆய்வுகளும் கூட மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக சமூகவியல், உளவியல், மானிடவியல், பண்பாட்டியல் போண்றவற்றில் இத்தகைய ஆய்வுகள் முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றன.

தொலைக்காட்சி உள்ளிட்ட ஊடக நிலையங்கள் சட்ட வரன்முறைகளுக்கு உட்பட்ட வகையில் இயங்குவது போல் தெரிந்தாலும், அவை அவற்றிலிருந்து மீறிய வகையிலேயே அதிகமாக செயற்படுகின்றன. தொலைக்காட்சித் துறையில் தனியார் அலைவரிசைகளின் வருகையானது சமூகத்தில் பாரிய மாற்றங்கள் ஏற்பட வழி வகுத்துள்ளன. நிறுவனங்களுக்கிடையிலான போட்டி, இலாப நோக்கம், தமக்கென பார்வையாளர் கூட்டத்தை தக்க வைக்க வேண்டும் என்ற முயற்சி போன்றவை நிகழ்ச்சிகளில் வெளியிடப்படும் தன்மை, தரம் என்பவைகளை மாற்றியமைத்து

கீழ்நிலைப் படுத்தி விடுவதாக உள்ளன. எனவே இதுபோன்ற நிலமைகளை நீக்கி செய்திகளை தயாரிக்கவும் ஒளிபரப்பவும் முயற்சிக்க வேண்டும்.

வன்செயல், வக்கிரம், பலாத்காரம், பாலியல், கொலை, கொள்ளை போன்ற விடயங்களை பற்றிக் கூறும்போது அதனை மற்றவர்கள் செய்யத் தூண்டும் வகையில் ஒளிபரப்பக்கூடாது. அதேபோன்று விரோதம், பகைமை பாராட்டல் போன்ற தீய குணங்கள் தூண்டப்படும் வகையில் அவற்றை சித்திரித்துக் காட்டுவதும் தவிர்க்கப்பட வேண்டும். அதற்கு மாறாக இப்பருவத்தினரின் ஆளுமைகள் வளர்த்தெடுக்கப்படக் கூடிய வகையில் அது சார்ந்த நிகழ்ச்சிகளை தயாரித்த வழங்குவதோடு, தற்போதிருக்கும் அவ்வாறான நிகழ்ச்சிகளின் ஒளிபரப்பு நேரத்தை அதிகரிக்கவும் வேண்டும்.

சமூகத்தில் குழப்பங்கள் ஏற்படாமலும், விழிப்புணர்வை ஏற்படுத்தக் கூடியதாகவும் தொலைக்காட்சி நிலையங்கள் தொழிற்பட வேண்டும். குறிப்பாக எதிர் பாராத வன்முறைகள் ஏற்படுகின்ற போது அதனை மேலும் தூண்டக் கூடிய முறையில் விடயங்களை வெளிப்படுத்தாமல், அதற்கு எதிரான விடயங்களையும், அதிலிருந்து மீளக்கூடிய வழிவகைகளை தெரிவிக்க வேண்டும். அதில் இடம்பெற்ற அழிவுகளை பெரிது படுத்திக் காட்டி அதனோடு தொடர்புடையவர்களுக்கு ஆத்திரத்தை உண்டு பண்ணாமல், வன்முறையற்ற போது காணப்படும் அமைதியான சூழல், வளர்ச்சி, சந்தோசமான வாழ்க்கை, மனித நேயம் போன்ற விடயங்களை வெளிக்காட்ட வேண்டும். இதன் மூலம் சமூகத்தினையும் தனிநபர் நடத்தை முறைகளையம் நல்ல முறையில் மாற்றியமைக்க முடியும்.

தனிநபர் உள மற்றும் உடல் ரீதியான பாதிப்புக்கு உள்ளாகும் விடயங்கள், ஆணாதிக்கப்போக்கு, பால் நிலை அசமத்துவம், இன மத ரீதியான பக்கச்சார்பு, பண்பாட்டு சீர்கேடுகள் போன்றவற்றினை உருவாக்கும் விடயங்களை இனங்கண்டு நீக்குதல் வேண்டும். குடும்ப உறவு கட்டமைவுகளை பேணக்கூடிய வகையில் உள்ள நிகழ்ச்சிகளை அல்லது விடயங்களை தொலைக்காட்சி அலைவரிசைகள் வெளிப்படுத்த வேண்டும். இன்று இவை ஒளிபரப்பாக்கும் சில செய்திகளை குடும்ப உறுப்பினர்கள் எல்லோரும் ஒன்றாக அமர்ந்திருந்து பார்த்து ரசிக்கக்கூடிய செய்திகளாக இல்லை. அந்தளவிற்கு நாகரிகமற்ற முறையில் ஒளிபரப்பப்படுகின்றன.

நெறிமுறை என்பது சமுதாயத்தில் மனிதர் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று அச் சமுதாயத்தினால் நடைமுறைப் படுத்தப்படும் விதிகளாகும். இதனை ஆங்கிலத்தில் Protocol அல்லதுNormஎன அழைக்கின்றனர். தொலைக்காட்சித் துறையிலும் இது கடைப்பிடிக்கப்படவேண்டியது அவசியமாகும். பரப்புரை அல்லது பிரசாரம், பரப்புரை சாதனங்கள், கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம், ஊடக சுதந்திர சுட்டெண், வடிவமைப்புக் கொள்கை, சமூகப்பணி, குடிவழக்குகள், தனிமனித வாழ்வு, மனிதனுக்கான ஓய்வு, தனிமனித உரிமை, பெண்களுக்கு எதிரான அனைத்து பாகுபாடுகளையும் ஒழிப்பதற்கான உடன்படிக்கை, ஐக்கிய நாடுகள் குழந்தைகளின் உரிமைகளுக்கான உடன்படிக்கை, குழு உரிமை, பொறாமை, முரண்பாடு, சமத்துவம், தன்னலம் அல்லது சுயநலம், சீர்திருத்த செயலாக்கம், மனித நேயம், அரசியல் ஊழல், நல்லாட்சி, அரசியலில் வெளிப்படை, சூழல்சார் உளவியல், நினைவாற்றல், மாய உணர்ச்சி, மாயத்தோற்றம், மனம், உடல்மொழி, பால்நிலையும் உடல்மொழியும், சமூக உளவியல், குறைகேள் அதிகாரி, ஒளிபரப்பு மீதான தடைகள், தொலைக்காட்சியாளருக்கானநெறிமுறைகள்என்பவை பற்றி அறிவதன் மூலம் தாங்களாகவே உணர்ந்து அனைத்து தொலைக்காட்சித் துறையினரும் சமூகநெறி பிறழாது பணியாற்ற முடியும்.

## 5. முடிவுரை:

இதுவரை இருந்ததை விடவும் எதிர்காலத்தில் மனித சமூகத்தின் நடவடிக்கைகளை தீர்மானிக்கும் சக்தியாக தொலைக்காட்சி உள்ளிட்ட ஊடகங்களே(Media) காணப்படப் போகின்றது. ஊடகத்தின் நேர்ப்படியான(Positive)பாத்திரத்தைப் போலவே எதிர்மறை(Negative)பாத்திரமும் காணப்படுகிறது. இன்றைய உலகின் பெரும்போக்கு(Mainstream)எவை என தீர்மானிக்கும் சக்தியாக தொலைக்காட்சி காணப்படுகிறது. பிற்போக்கு ஆதிக்க சித்தாந்தங்களை பெருங்கதையாடல்களாக மாற்றி அவற்றை நிலை நிறுத்தும் கருவியாக இது காணப்படுகிறது. தொலைக்காட்சியால் வழிநடத்தப்படாத எந்த சமூகமும் உலகில் இல்லை. தொலைக்காட்சியை யார் கையகப்படுத்தியுள்ளனரோ அவர்களிடம் மனித நடத்தையை கட்டுப்படுத்தும் அதிகாரம் 90 வீதம் காணப்படுகிறது. அவை தயாரித்து அறிமுகம் செய்கின்ற செய்திகள் சமூக அறத்துடன்

தயாரிக்கப்படுவதாகவோ் ஊடக அறத்துடன் ஒளிபரப்பப் படுவதாகவோ இல்லை. தொலைக்காட்சியை இலங்கை தமிழ் சமூகம் வேண்டாம் என ஒதுக்கி விடவும் முடியாது. ஏனெனில் அதனைக் கச்சிதமாகப் பயன்படுத்துவதனால் நாட்டு நடப்புகளையும் உலக நிலவரங்களையும் அறிவியல் உண்மைகளையும் இன்னும் பல்வேறு பயன்தகு அம்சங்களையும் பெற்றுக்கொள்ள முடிந்துள்ளது.

தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் விடயங்கள் மூலம் பல தகவல்களை மக்கள் அறிய முடியுமென்பதால் உலகளாவிய ரீதியில் அதன் பயன்பாட்டின் முக்கியத்துவத்தை யுனெஸ்கோ அமைப்பு ஏற்றுக்கொண்டுள்ளது. கருத்து சுதந்திரத்தை மேம்படுத்தல், ஆற்றல் வெளிப்பாடுகளை ஊக்குவித்தல் மற்றும் சிறந்த காணொளிகள் என்பது யுனெஸ்கோ திட்டங்களுக்கு அவசியம் என்பதால் தொலைக்காட்சி தினம் யுனெஸ்கோவினால் அங்கீகரிக்கப்பட்டது. உலகில் இடம்பெறும் வன்முறைகள் மற்றும் கலாசார சீர்கேடுகள் என்பன தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் சாதனமாக தொலைக்காட்சி பயன்பத்தப்பட வேண்டுமென யுனெஸ்கோ தெரிவித்திருந்தது. இதன்மூலம் சிறுவர்கள் மாத்திரமன்றி இளைஞர்களையும் தெளிவுபடுத்த முடியுமென நம்பிக்கை வெளியிடப்பட்டது. எமது ஆய்வுக்குட்பட்ட அலைவரிசைகளில் கடந்தகாலங்களில் ஒளிபரப்பாகியுள்ள தொலைக்காட்சி செய்திகளினால் விளைந்துள்ள அனுகூலங்களை விடவும் பிரதிகூலங்களே அதிகமென ஆராய்ந்து அறிய முடிந்துள்ளது. அதனை சமூகவியலாளர்களும் உளவியலாளர்களும் கூறியுள்ள கருத்துக்களும் உறுதிப்படுத்தியுள்ளன.

## 6. உசாத்துணைகள்:


JOSEPH, DOMONICK. (1995), The Dynamics of Mass Communication, MacGraw Hill: New York.

KARL, W. DEUTCH. (1953), Nationalism and Social Communication, MIT Press: Cambridge.

SILVERSTONE, ROGER. (1995), Television and everyday life, Routledge: London and New York.

செல்லத்துரை, அருணா. (1997), இலங்கையில் தொலைக்காட்சி. அருணா வெளியீடு: கொழும்பு.

பகீரதி, எம். (2010), இலங்கையில் தொலைக்காட்சி – நிகழ்ச்சிகள் ஊடான சமூகவியல் பார்வை. கிருஷ் வெளியீடு: மட்டக்களப்பு.

மோசேஸ், எஸ். (2007), வெகுஜன ஊடகம். கிருஷ் வெளியீடு: மட்டக்களப்பு.

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் நிர்வாக அறிக்கைகள், ஆண்டறிக்கைகள் (1983 - 2011).